


# சங்ககிரி புனித அந்தோனியார் திருத்தலம்
# புத்தாலய அபிஷேக நினைவு மலர்

பங்குத்தந்தை
M. அல்போன்ஸ்

# சங்ககிரி புனித அந்தோனியார் திருத்தலம் புத்தாலய அபிஷேக நினைவு மலர்

ஆசிரியர்

**பங்குத்தந்தை M.அல்போன்ஸ்**
புனித அந்தோனியார் திருத்தலம்
சங்ககிரி

# சங்ககிரி புனித அந்தோனியார் திருத்தலம்

# புத்தாலய அபிஷேக நினைவு மலர்

அச்சிடலாம் : பேராயர் ம. ஆரோக்கியசாமி
மதுரை மறைமாநிலப் பேராயர்

ஆசிரியர் : தந்தை எம். அல்போன்ஸ்

அச்சிட்டோர் : மாலிகா அச்சகம்
நொபிலி வளாகம்
கோ. புதூர், மதுரை - 625 007
தொலைபேசி : 560090



**Archbishop Lorenzo Baldisseri**
*Apostolic Nunciature in India*
*50-C, Niti Marg*
*Chanakyapuri*
*New Delhi - 110 021.*

Dear Rev. Fr. M. Alphonse,

It is with pleasure that I send best wishes and greetings on the occasion of the blessing of the new Church of St. Antony at Sankari, in the Salem Diocese, on 15-05-2001.

On behalf of the Holy Father, whom I represent in India, I send all the Faithful, Parish Priest and Religious of the Parish, cordial blessings. I also wish and pray so that St. Antony, the Patron, protect you always and be your strength.

I am sure that the Souvenir which will be brought out on the occasion will be enlightening to all the readers and will be a milestone in the history of the Parish Church.

New Delhi, 16th April 2001.

+ [signature]

Archbishop Lorenzo Baldisseri
Apostolic Nuncio



**Most Rev. Dr. Arokiasamy**
*Archbishop of Madurai*
*Archbishop's House*
*K. Pudur*
*Madurai - 625 007*

அருள்தந்தை எம். அல்போன்ஸ் படைத்துள்ள

**"சங்ககிரி புனித அந்தோனியார் திருத்தலம்
புத்தாலய அபிஷேக நினைவு மலர்"**

என்ற இந்நூலில் அணுவைத் துளைத்து ஏழ்கடல் புகுத்தப் பட்டுள்ளது.

இச்சிறிய நூல் சேலம் மறைமாவட்ட வரலாறு, சங்ககிரிப் பட்டண வரலாறு, சங்ககிரி மலையின் சிறப்பு, புனித அந்தோனியாரின் வாழ்க்கை வரலாறு, அவர் செய்த புதுமைகள், அவர்மீது பக்தி வளரச் செபங்கள் கொண்டுள்ளது.

புதிய கோவில் அர்ச்சிக்கப்படும் நேரத்தில் பழைய கோவிலின் வரலாற்றை மறந்து விடக்கூடாது. 1795இல் போர்வீரர்களால் கட்டப்பட்ட கோவில் இப்போது இயேசு கிறிஸ்துவின் படைவீரரான தந்தை அல்போன்சால் கட்டப்படுகிறது.

இந்நூலில் பழமையும் புதுமையும் (அதாவது கடந்த கால வரலாறும் இன்றைய நிலையும்) இணைந்துள்ளன.

இதற்கடையாளமாகக் கோவிலில் பழைய மணியும் புதிய மணியும் ஒலிக்கின்றன.

மக்களுக்கு அறிவுச் செல்வமும் பக்தி உணர்வும் கொடுத்துக் கொண்டிருக்கிற தந்தை அல்போன்ஸ் 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற குறிக்கோளைச் செயல்படுத்துகிறார்.

அவர் பணி வாழ்க, வளர்க.

இப்படிக்கு

+ M Arokiasamy

(ம. ஆரோக்கியசாமி)
மதுரை மறைமாநிலப் பேராயர்.




**Most Rev. Dr. S. Michael Augustine**

*Archbishop of Pondicherry & Cuddalore*

*Archbishop's House*

*Pondicherry - 605 001*


**07-04-2001**

பெறுநர்
அருட்தந்தை அல்போன்ஸ்
புனித அந்தோனியார் ஆலயம்
சங்ககிரி - **637 301**
சேலம் மாவட்டம்

அன்புள்ள அருட்தந்தை அல்போன்ஸ் அவர்களுக்கு,

ஆலய அர்ச்சிப்பின் போது வெளியிடவிருக்கின்ற நினைவு மலருக்கு வாழ்த்துரை கேட்டுள்ளீர்கள். நன்றி!

சங்ககிரி படிப்படியாக முன்னேற்றமடைந்தாலும் உம்காலத்தில் அது சற்று வேகமாக முன்னேறுவதைக் காண்கிறேன். வாழ்த்துகிறேன்.

புனித அந்தோனியாரை அறியாத கத்தோலிக்கரே இல்லை எனலாம். பிறமதத்தவரும் ஓரளவிற்காவது அவரைப்பற்றி தெரிந்து வைத்துள்ளனர். புனித அந்தோனியார் ஆலயங்களனைத்தும் சிறப்புற்றிருக்கின்றன.

புனித அந்தோனியார் புதுமைகளில் மட்டும் வல்லவர் அல்ல. அவருடைய புனித வாழ்க்கையும் போதனைகளும் அவரை உயர்த்தியுள்ளன. வீரியமான விசுவாசம்; அடக்கமான அறிவாளர்; தாழ்ச்சியில் சிகரம்; பக்தியில் சித்தர்; போதனையில் பிரமாணிக்கம் - இவையும் இன்ன பிறவும் அவருடைய நற்பேறுகள்.

கோடிப்புதுமை புரியும் புனித அந்தோனியாரின் வல்லமை அனைத்தும், அவர் இறைவனிடமிருந்து பெற்று தருவதே.

அவருடைய சிறப்பையும், சேலம் மறைமாவட்டம் மற்றும் சங்ககிரியின் வரலாற்றையும் பின்னிப்பிணைத்து, உமக்கே உரிய அருந்தமிழில் எழுதி வெளியிடும் உம் முயற்சியைப் பாராட்டுகிறேன். இறைவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. இந்நூலைப்படிப்போர் அனைவரும் கடவுளால் ஆசீர்வதிக்கப்படுவாராக.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள

(ச. மிக்கேல் அகுஸ்தீன்)
புதுவை - கடலூர் பேராயர்




**Most Rev. Dr. S. Singaroyan**

*Bishop of Salem*
*Bishop's House*
*Post Box No. 703*
*Maravanary*
*Salem - 636 007*


*07-04-2001*

அருள்தந்தை எம்.அல்போன்ஸ் அவர்களுக்கு,

சேலம் மறைமாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பணித்தளங்களில் ஒன்றான சங்ககிரியில் புனித அந்தோனியாரின் திருப்பெயரால் புதிய ஆலயம் எழுப்பப்பட்டுள்ளதை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். குன்றின் மேலிட்ட தீபம் போல் சிறுகுன்றின் மீது அமைந்து, அனைத்து மக்களையும் தம்மிடம் வாரும் என்றழைக்கும் அழகிய இவ்வாலயத்திற்காய் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்ப மிக்க ஆர்வமும் ஆவலும் கொண்டிருந்த அருட்தந்தை எம். அல்போன்ஸ் அடிகளாரைப் பாராட்டுகிறேன். அவரது அருமையான திட்டத்தாலும், பெருமுயற்சியாலும், அயரா உழைப்பாலும் ஆலயக் கட்டுமான பணி மிக விரைவாகவும், திறமையாகவும் நடந்தேறியது. பொறியாளர், கட்டுமானப் பணியாளர், பொதுமக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, ஆலயப் பணியைத் திறம்பட இயக்கிய தந்தையவர்களையும் அவருடன் உழைத்தவர்களையும் வாழ்த்துகிறேன்.

ஆலயப் பணிகளுக்கு ஒத்துழைப்பையும் தாராள மனதுடன் பொருளுதவியையும் நல்கிய அனைவருக்கும் நன்றிகூறி அவர்களுக்காக இறையாசீரை வேண்டுகிறேன்.

ஆலயம் என்பது இறைவனை மனிதன் தரிசித்து இறையனுபவம் பெறும் இடம். அதுவே மனிதனைத் தேடி இறைவன் காத்திருக்கும் இடமுமாகும். ஆலயத்தில் மனிதன் இறைவனையும் இறைவன் மனிதனையும் கண்டு, தரிசித்து உறவாட வேண்டியது அவசியம். சங்ககிரி பொது மக்களும், மற்றும் சங்ககிரி வட்டாரத்தைச் சேர்ந்த இறைமக்களும் புதிய ஆலயத்தை நாடிவந்து, புனித அந்தோனியாரின் வேண்டுதலால் இறையாசீர் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

ஆலயப் புனிதப்படுத்துதல் விழாவின் போது வெளியிடப்படும் இம்மலர், வருகை தரும் அனைவருக்கும் புனித அந்தோனியார், சேலம் மறைமாவட்டம், சங்ககிரி நகரம் ஆகியவற்றைப் பற்றி சிறந்த வரலாற்றுத் தகவல்களைத் தந்து இவ்வாலயதுடன் நல்லதொரு ஈடுபாட்டை ஏற்படுத்த துணைபுரியும் என நம்புகிறேன்.

இதனை எழுதிய தந்தை எம்.அல்போன்ஸ் அவர்களை வாழ்த்துகிறேன். இதனை வாசிக்கும் அனைவருக்கும் இறையருள் வேண்டி செபிக்கிறேன்.

செ. சிங்கராயன்
சேலம் ஆயர்
**07-04-2001**



**Most Rev. Dr. Joseph Antony SDB**
*Bishop of Dharmapuri*
*Bishop's House*
*Post Box No. 32*
*Nethaji by-pass Road*
*Dharmapuri - 636 701*

அன்புள்ள தந்தை அல்போன்ஸ் அவர்களுக்கு,

கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். சங்ககிரியின் வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் புனித அந்தோனியாரின் ஆலயமானது புதியதாக் கட்டப்பட்டு ஆசீர்வதிக்கப்பட இருப்பதை கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

அவ்வமயம் தாங்கள் எழுதியுள்ள சிறு புத்தகம் வெளிவரவுள்ளதை கண்டு மகிழ்கின்றேன். அதிலும் குறிப்பாக பதுவை நகர் புனித அந்தோணியாரின் வாழ்க்கை சுருக்கம், சங்ககிரி பங்கில் கிறிஸ்தவ சரித்திரம் என்பது பாராட்டுவதற்குரியது. தங்களின் இந்த கடின உழைப்பை மனமாற பாராட்டுகிறேன்.

உலகெங்கும் விசுவாசிகள், மற்றும் அனைவருக்கும் இறையருளை நிறைவாக பெற்றுக்கொடுக்கும் வள்ளலான புனித அந்தோனியாரின் புகழ் பரவ இப்புத்தகம் பெரிதும் உதவும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பதுவை நகரில் பிறந்து இன்று உலகமெங்கும் போற்றும் புனித அந்தோனியார் சங்ககிரி மக்களின் குறை நீக்கி இறையருளை நிறைவாய் பெற்றுத் தருவாராக.

இவண்,
கிறிஸ்துவில் அன்புள்ள

+ Joseph Antony SDB
11-4-2001

(மேதகு. ஜோசப் அந்தோணி இருதயராஜ் ச.ச.)
தருமபுரி ஆயர்.

# பங்குத் தந்தையின் முன்னுரை

இயேசுவின் இறுதி இரவு உணவு அறைதான் கிறிஸ்துவ வழிபாட்டின் முதல் இடமாகும். அதற்குப்பின் "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று இயேசு கொடுத்த கட்டளையை நிறைவேற்ற - "உணவுக் கூடங்கள்' வழிபாட்டு இடங்களாக இருந்தன. அதன்பிறகு கி.பி. 53-லிருந்து கி.பி. 313 வரை கிறிஸ்துவர்களின் சுரங்கக் கல்லறைகள் வழிபாட்டு இடங்களாக பயன்படுத்தப்பட்டன. கி.பி. 313-லிருந்து சுரங்கக் கல்லறைகள் திருயாத்திரைத் தலங்களாக மாறவே, கி.பி. 313-இல் உரோமை அரசன் கொன்ஸ்டான்டைன் கிறிஸ்துவ மதத்துக்கு அங்கீகாரம் கொடுத்து, அரசின் பொதுக்கட்டிடங்களை வழிபாட்டுக்காக ஒதுக்கினதுமன்றி, பசிலிக்கா என்ற பேராலயங்களையும் கட்டிக்கொடுத்தான். ஒவ்வொரு காலத்திற்கு மேற்ப கோவில்கள் பல கலைவடிவங்களைப் பெற்றன. இவ்வாறு கட்டிடக் கலைகளில் ரோமன், கோதிக் போன்ற புதுப்பாணிகள் தோன்றின.

ஆலயம் ஆண்டவரின் இல்லம்

ஆலயம் தூய்மைக்கும் அமைதிக்கும் பிறப்பிடம்

ஆலயம் செபக்கூடம்

ஆலயம் வழிபாட்டு இடம் - பலி ஒப்புக் கொடுக்குமிடம்

ஆலயம் இறைவனும் மனிதனும் சந்திக்குமிடம்

ஆலயத்தில் காணப்படும் அம்சங்கள்: சுத்தம், அழகு, அமைதி, ஒழுங்கமைப்பு, மௌனம், மரியாதை, பயபக்தி முதலியன. ஆலயம் ஆண்டவனின் இல்லம் என்று சொல்லும் போது, ஆலயத்தில் ஆண்டவன் பிரசன்னமாயிருக்கிறார் என்பது தெளிவு. கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியும் உண்டு. ஆலயம் மக்களை நல்வழிப்படுத்தும் இடமாகும். புகழ் மிக்க எருசலேம் தேவாலயத்தைக் கட்டிய பெருமை சாலமன் அரசனைச் சாரும். அகிலம் படைத்த ஆண்டவனுக்கென்று ஆலயம் எழுப்பி, அகிலம் உய்ய ஆண்டவனைத் தொழுவோம்.

சேலம் மாநகரத்துக்கு முன்பே சிறப்பு வாய்ந்த நகரமாக இருந்தது சங்ககிரி. அங்கே ஏறக்குறைய 400 ஆண்டு காலமாக கத்தோலிக்க கிறிஸ்தவ சமுதாயம் அந்த வட்டாரத்தில் வாழ்ந்து வந்திருக்கிறது. இத்துணைப் புகழ் மிக்க சங்ககிரியில் ஒரு காலக்கட்டத்தில் கி.பி. 1795-இல் சிப்பாய்களே மாதாக் கோவில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சங்ககிரியில் பழுதுபட்ட பழைய கோவில் இடிக்கப்பட்டு புனித அந்தோணியாருக்குப் புதிய கோவில் கட்டப்பட்டுள்ளது. புதிய கோவில் அபிஷேக விழாவின் போது இந்த வெளியீட்டைப் பிரசுரிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். பழுதடைந்த ஆலயத்தில் கடந்த எட்டு ஆண்டளவாக நிலைத்திருந்து பொறுமையுடன் திருப்பலி நிறைவேற்றி வந்தேன். தவிர நானே இருந்து புதிய கோவிலையும் கட்ட வேண்டுமென்ற நிலையை உருவாக்கிக் கொடுத்தது புனித அந்தோனியாரின் புதுமை தான் என்பதை மக்கள் எல்லாரும் அறிவார்கள். புதிய ஆலயத் திறப்பு விழா மலரில் மூன்று வரலாறுகள் இடம் பெறுகின்றன. 1. புனித அந்தோனியாரின் வாழ்க்கை வரலாறு 2. சங்ககிரி பங்கின் வரலாறு 3. சங்ககிரி மலையின் வரலாறு. மூன்று வரலாறுகளையும் தாங்கி வருகிறது இம்மலர்.



*சங்ககிரி மலையும்*
*சங்ககிரி பங்குத்தந்தையும்*

புதுயுகம் படைப்போம், வரலாறு படைப்போம் என்றெல்லாம் முழக்கம் செய்யப்படுகிறது. புதிய கோவில் கட்டப்பட்டு விட்டால், எல்லாம் முடிந்து விட்டது என்று சொல்லி விட முடியாது. மக்கள் ஆலயத்துக்கு அனுதினம் சென்று, ஆண்டவனைத் தொழுது, அருள்பெற்று, சுகம் பெற்று, வளமாக மகிழ்வுடன், மனநிறைவுடன் வாழ வேண்டும். ஆலயத் தொழுகையோடு

குடும்ப வாழ்வு சீர் பெற்று நல்ல சமுதாயம் உருவாக வேண்டும். பிறர் பணியிலும், சமுதாயத் தொண்டிலும் ஈடுபட்டுப், புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அன்பு, உண்மை, நீதி, ஒழுக்கம், சமாதானம், சகோதரத்துவம் போன்ற உயர் இலட்சியங்களை எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டும். எனவே ஆலய வழிபாட்டுடன் நமது வாழ்க்கை நின்று விட்டால் நமது வாழ்க்கை பொருளற்றதாகி விடும்.

இவ்வுலகச் சந்தடியிலும், இரைச்சலிலும் இறைவனைக் காணவியலாது. எனவே ஆலயத்துக்குச் சென்று அமைதியில் ஆண்டவனைக் காணவேண்டும். நிம்மதியைப் பெற வேண்டும். எண்ணங்கள் சிந்தாமல், சிதறாமல் ஒருநிலையை அடைய வேண்டும். நம் எண்ணம் அழுத்தமாயிருந்தால் நம் பிரார்த்தனையில் பலமும் பலனும் கூடுதலாகின்றன. எண்ணங்கள் சிதறும்போது சக்தியும் சிதறி விடுகிறது.

பிரார்த்தனையில் நாம் பெறுவது ஆன்மீக பலம். அது 1. இழந்த நம்பிக்கையை திரும்பப் பெறுகிறது. 2. இல்லாத நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது. 3. வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படத் துணை செய்கிறது. பிரார்த்தனை செய்வோர் மூன்று வகைப்படுவர். 1.பிரார்த்தனையில் நம்பிக்கையே இல்லாதவர் 2.பிரார்த்தனையை சந்தேகத்தோடு செய்கிறவர்கள் 3.பிரார்த்தனையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள். ஆண்டவரின் பக்தர்கள் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

சங்ககிரியில் புனித அந்தோணியார்ப் பெயரில் கட்டப்பட்ட கடந்த நூற்றாண்டின் கோவில் இடிக்கப்பட்டு, இந்த புதிய நூற்றாண்டின் கோவில் என சங்ககிரி புனித அந்தோணியாரின் புதிய ஆலயம் விளங்குகிறது. புகழ் மிக்க சங்ககிரி மலையின் அடிவாரத்திலிருந்து கிழக்குப் பக்கத்தில் படர்ந்திருக்கும் சங்ககிரி பட்டணத்தில் புனித அந்தோணியாரின் இப்புதிய ஆலயக் கோபுரம்தான் மிக உயர்ந்த கட்டிடம் என்ற சிறப்பு வாய்ந்தது. நகரின் எத்திசையிலிருந்து பார்த்தாலும் ஆலயத்தின் கோபுரம் தெரியும். பழைய எடப்பாடி ரோடும் மலை அடிவாரம் ரோடும் சந்திக்கும் முனையில் கிழக்குப் பக்கத்தில் பாறையில் கட்டப்பட்டு, மலையை நோக்கிக் கெம்பீரமாக நிற்கிறது ஆலயமும் அதன் கோபுரமும். கோவிலின் கோபுரத்தில் பழைய கோவிலின் மணியும், புது மணி ஒன்றும் ஆக, கடந்த கால வரலாற்றை நினைவூட்டி, புது யுகத்தையும் இணைத்து இரண்டு மணிகள் கோபுரத்தில் காட்சியளிக்கின்றன. பழையதும் புதியதும் கலந்து ஒருங்கே ஒலி எழுப்புகின்றன.

கோபுரத்தை உற்றுநோக்கினால் கோடிப்பாவம் போகும் என்பார்கள். ஆகவேதான் வானுயர வானளாவ ஆலயக் கோபுரங்கள் எழுப்பப்பட்டன. ஒரு முஸ்லிம் செபிக்கும்போது, மெக்காவை நோக்கி செபிப்பார். ஒரு யூதர் செபிக்கும்போது எருசலேம் தேவாலயத்தை நோக்கி செபிப்பார். எனவே ஆலயமும் ஆலயக் கோபுரமும் மனிதரின் வாழ்க்கையில் அர்த்தமுள்ளவை, முக்கியத்துவும் வாய்ந்தவை. ஆண்டவனுடைய பிரசன்னத்தையும், சக்தியையும், அன்பையும் மனிதன் உணராவிட்டால் ஆலயம் எழுப்பியும் பயனில்லை. நமது வாழ்வு அருள் வாழ்வாக மேலும் வளர இத்திருப்பணி நமக்குத் துணைபுரிவதாக. இறையருள் பெருகுவதாக.

**தந்தை M. அல்போன்ஸ்**
**பங்குத்தந்தை**
**புனித அந்தோணியார் திருத்தலம்**
**சங்ககிரி**
**10.05.2001**

## சங்ககிரி பங்கின் பாதுகாவலர்

# புனித அந்தோணியாரின் வாழ்க்கை வரலாறு

புனித அந்தோணியார் ஐரோப்பாவில் போர்த்துக்கல் நாட்டின் தலைநகராகிய லிஸ்பன் மாநகரில் கி.பி. 1195ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி பிறந்தார். அவருடைய இயற்பெயர் பெர்டினான்ட் தெபுல்லி போயின்ஸ். சிறுவயதிலிருந்தே தவறாமல் தினமும் திருப்பலியில் கலந்து கொள்வார். இளமையில் பசாசு அவரைத் தாக்கியபோது தேவ அன்னையின் பெயர் சொல்லி பசாசை விரட்டினார். அனைத்தையும் வெறுத்து புனித அகுஸ்தினாரின் துறவற சபையில் சேர்ந்தார். பிறகு புனித பிரான்சிஸ்குவின் சபையில் சேர்ந்தார். வெளிநாடுகளுக்குச் சென்று திருமறையைப் பரப்ப வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அவரது உடல் நலக் குறைவினால் அவரது விருப்பம் நிறைவேறாமல் போயிற்று. திருமறை உரை ஆற்றுவதில் வல்லுநர். அவரது மறைஉரையைக் கேட்க, பல இடங்களிலிருந்தும் மக்கள் வந்தனர். அவரது உரை கேட்டு மனம் மாறினர். இறைவனின் அருளால் அவர் பல புதுமைகளைச் செய்தருளினார். அவர் செய்த புதுமைகள் ஏராளம். பேய்களை ஓட்டினார். தீமைகள் அகன்றன. தொற்று வியாதிகளும், எல்லா நோய்களும் நீங்கின. பகுத்தறிவில்லா மிருகங்கள் அவருடைய கட்டளைகளுக்குப் பணிந்தன. பாவிகள் மனம் திரும்பினர். தீயவர்கள் நல்லவர்களாக மாறினார்கள். காணாமல் போன பொருட்கள் கிடைக்கப் பட்டன. இறந்தவர் உயிர் பெற்று எழுந்தனர். அவரிடம் உதவி நாடி வந்தவர் எவரும் உதவியை அடையாமல் போனதில்லை. இவ்வாறு புனித அந்தோணியார் பத்து வருடங்களுள் பல நன்மைகளையும், புதுமைகளையும் செய்து “கோடி அற்புதர்” என்னும் பெயர் பெற்றார். கி.பி. 1231ஆம் ஆண்டு ஜுன் 13ஆம் நாள் நன்மரணம் அடைந்தார். இத்தாலியிலுள்ள பதுவா நகரில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது இறந்த உடலைத் தொட்ட பலர் உடனே குணம் ஆனார்கள். அவர் இறந்தபோது “புனிதர் இறந்தார்’ என்று உலகம் கூறிற்று. மறு வருடமே திருத்தந்தை இவருக்குப் புனிதர் பட்டம் கொடுத்தார். அவர் அடக்கம் செய்யப்பட்ட நாள் செவ்வாய்க்கிழமை ஆனதினாலும், அந்த நாளில் பல புதுமைகள் நடந்ததினாலும் உலகமெங்கும் செவ்வாய்க்கிழமைத் தினம் புனித அந்தோணியார் நவநாள் நடத்தும் பழக்கம் உண்டானது.

# அந்தோணியாரின் இளமை



**சி**றுவயதிலேயே கோவிலுக்கு மிகவும் ஆர்வத்துடன் செல்வார். திருப்பலிக்கு உதவி செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார். ஏழைகள் பால் அன்பு கொண்டவராய் தன்னிடம் உள்ள அனைத்தையும் அவர்களுக்கு ஆனந்தத்தோடு கொடுப்பார். இயேசுவின் தாய் அன்னை மரியாள் மீது மிகுந்த பக்தி செலுத்தினார். அந்தோணியாரின் தாய் மாதா பக்தியும், ஏழைகளின் மேல் அன்பும் கொண்டவள். ஒரு நல்ல தாயின் நல்ல குணங்கள் எப்படி குழந்தைகளின் உள்ளங்களை ஆட்கொண்டு குழந்தைகளும், நல்வழியில், புனித வாழ்க்கை வாழ காரணமாயிருக்கின்றன என்பதை அந்தோணியாரின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தாயின் முன்மாதிரிகை குழந்தைகளுக்கு வழிகாட்டி என்பதை நமது கிறிஸ்துவ தாய்மார்கள் மனதில் கொள்ள வேண்டும்.

போர்த்துகல் நாட்டின் தலைநகரம் லிஸ்பன் நகர்ப்புற வாழ்க்கை. எல்லா களியாட்டங்களையும் கொண்டது. வாழ்க்கையின் தூய்மையும் புனிதத்தன்மையும் கெட்டுப்போக வாய்ப்புக்களோ ஏராளம். பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதும் விசுவாசத்தைக் காப்பதும் கடினமானதாக இருந்தன. ஒருமுறை அந்தோணியார் கோவிலில் திவ்ய நற்கருணைக்கு முன்பாக முழந்தாளிட்டு செபித்துக் கொண்டிருக்கும்போது, சாத்தான் சோதிக்கலானான். உடனே அந்தோணியார் விசுவாசத்துடன் தரையில் சிலுவை அடையாளம் வரைந்தார். சாத்தான் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான் என்று அவரது வாழ்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தன் விரலால் வரைந்த சிலுவை அடையாளம் இன்னும் அந்த ஆலயத்தில் அதே இடத்தில் தரையில் காணப்படுகிறது. இன்றும் பக்தர்கள் அங்கு சென்ற அதைத் தரிசித்து வருகிறார்கள். நகர வாழ்க்கையின் மாயையை வெறுத்து, இறைவனுக்கு தன்னை அர்ப்பணிக்க விரும்பி, துறவற வாழ்க்கையை மேற்கொண்டார்.



# புனிதரின் புதுமைகள்

## 1. துண்டிக்கப்பட்ட பாதம் பொருந்தியது :

லெயோ நார்டோ என்ற வாலிபன் - ஊரிலேயே யாருக்கும் அடங்காத பொல்லாதவன். புனித அந்தோணியாரின் மறை உரையைக் கேட்டு மனம் மாறி புனிதரிடம் வந்து தனது தீய வர்ழ்க்கையை ஒப்புவித்தான். அப்போது தனது தாயை எட்டி உதைத்ததையும் கூறினான்.. அதற்கு புனித அந்தோணியார் அவனைப் பார்த்து, "தாயை உதைத்த காலை வெட்டி எறிவதே நல்லது" என்று புத்தி சொன்னார். அதை அப்படியே புரிந்து கொண்டு வீட்டுக்குப் போனதும் கோடாரியை எடுத்து தாயை உதைத்த தனது வலது காலை ஒரே வெட்டில் வெட்டி எறிந்தான். மயக்கமுற்று கீழே சாய்ந்தான். அவனது தாயே புனிதரிடம் ஓடிப்போய் நடந்ததைச் சொல்லிக் கதறி அழுதாள். உடனே புனித அந்தோணியார் அவளுடைய வீட்டுக்குச் சென்று வெட்டுண்டு கிடந்த பாதத்தைக் கையில் எடுத்து அவனுடைய காலோடு பொறுத்தி இறைவனை மன்றாடினார். வெட்டுண்ட பாதமும் காலும் ஒன்றோடு ஒன்று புதுமையாக பொருந்திக் கொண்டன.

## 2. கடல் மீன்களுக்குப் பிரசங்கம் :

ரிமினி என்னும் நகரம் புனிதரின் விசாரணையில் இருந்தது. அவரது பேச்சினால் மக்கள் நல்வழிப்படுவதைக் கண்டு வேத விரோதிகள் மக்களைப் புனிதரின் பிரசங்கத்துக்குப் போகக்கூடாது எனத் தடுத்து விட்டனர். புனிதரோ மனம் தளராமல் கடற்கரைக்குச் சென்று தன் கைகளை கடல் மேல் உயர்த்தி, "கடல் வாழ் மீன்களே நான் சொல்வதைக் கேளுங்கள்; மனிதர்கள் கடவுளின் வார்த்தையைக் கேட்க மறுத்து விட்டனர். எனவே கடவுளின் வார்த்தையை உங்களுக்குக் கூறவே நான் வந்துள்ளேன்." என்று தனது மறை உரையைத் தொடங்கினார். ஏராளமான மீன்கள் கரைக்கு வந்து தலையை நீருக்கு மேல் நீட்டி கவனமாக கேட்டனவாம். மறை உரை முடிந்த பின் நீருக்குள் சென்றனவாம். இதை நேரில் பார்த்த திரளான மக்கள் அதுமுதல் புனிதரின் பிரசங்கத்தைக் கேட்கப் போனார்கள்.

## 3. நஞ்சை உண்டார் புனிதர் :

வேத விரோதிகள் ஒருமுறை புனிதரிடம் நஞ்சு கலந்த உணவைக் கொடுத்து, 'நீர் போதிக்கும் உண்மைகள் உண்மையானால் இந்த

உணவைச் சாப்பிடும்' என்றனர். அந்தோணியார் உடனே நஞ்சு கலந்த உணவின் மேல் சிலுவை அடையாளம் வரைந்து உணவை உண்டார். அவருக்கு எந்தக் கெடுதியும் விளையவில்லை. வேத விரோதிகள் மெய் மறையைத் தழுவினர்.



## 4. தூங்கியவன் பிணமானான்:

இல்லிரியா என்ற ஊரில் புதுமடம் ஒன்று கட்டிக் கொண்டிருந்தார் புனித அந்தோணியார். சூளையிலிருந்து செங்கல் கொண்டு வர வேண்டியிருந்தது. அவ்வழியே வண்டியை ஓட்டிச் சென்ற ஒருவனைக் கூப்பிட்டு செங்கல் எடுத்து வரச் சொன்னார். அவன் வண்டிக்குள் ஒரு பிரேதம் இருப்பதாகப் பொய் சொல்லி விட்டு தன் வழியே சென்றான். சிறிது நேரம் சென்ற பின் வண்டிக்குள் தூங்கிக்கொண்டிருந்த தன் மகனிடம் தான் ஏமாற்றிய நிகழ்ச்சியைச் சொல்லலாம் என மகனை எழுப்பினான். அவனோ உண்மையிலேயே செத்துக் கிடந்தான். அலறிக்கொண்டு புனிதரிடம் சென்று அவர் காலில் விழுந்து, தவறுக்கு மன்னிப்பு கோரினான். புனிதர் இறந்தவன் மீது கைகளை நீட்டி வேண்ட இறந்தவன் உயிர் பெற்றெழுந்தான்.

## 5. புனிதரின் கரங்களில் பாலன் இயேசு:

ஷாட்டினே என்னும் பிரபுவின் வீட்டில் அந்தோணியார் ஓய்வுக்காகத் தங்கியிருந்தார். புனிதரின் அறையில் ஒரு நாள் இரவில் பேரொளி வீசியது. புனிதரின் கைகளில் இயேசு குழந்தை இருந்ததைப் பிரபு பார்த்தார்.

## 6. உடைந்த கூஜா ஒட்டியது:

ஒரு கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது ஒரு ஏழைப்பெண் அவரைத் தன் வீட்டுக்கு அழைத்தாள். அப்போது தவறிப்போய் ஒரு கூஜா கீழே விழுந்து சுக்கு நூறாக உடைந்தது. அப்பெண் மிகவும் வருந்தினாள். புனிதர் இதைப் பார்த்து உடைந்த துண்டுகளை ஒன்று சேர்த்து இறைவனை மன்றாட கூஜா முன்போல உருப்பெற்றது.

## 7. இறந்த குழந்தை உயிர் பெற்றது:

குழந்தையை வீட்டில் தூங்க வைத்து விட்டு, ஒருபெண் புனிதரின்



பிரசங்கத்தைக் கேட்க வந்தாள். பிரசங்கம் முடிந்து வீடு திரும்பிய பொழுது குழந்தை செத்துக் கிடந்தது. அந்தோணியாரிடம் ஓடிப்போய் குழந்தை இறந்ததைச் சொல்லிக் கதறி அழுதாள்.. புனிதர் அவளைப்பார்த்து, "அம்மா நீ உன் வீட்டுக்குப் போ. கடவுள் உன் மீது தயவாய் இருக்கிறார்" என்றார். அவள் வீட்டுக்கு ஓடிப்போய்ப் பார்த்தபோது அவளது குழந்தை பொக்கை வாய் சிரிப்போடு இரு கைகளையும் விரித்துக்கொண்டு தாயிடம் தாவி வந்தது.

## 8. கூட்டம் மழையில் நனையவில்லை :

புனிதரின் பிரசங்கத்தைக் கேட்க நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்தது. அந்தோணியாரின் பிரசங்கத்தைக் கேட்க எவ்வளவு பெரிய கோயிலானாலும் இடம் போதவில்லை. எனவே அந்தோணியார் பெரிய மைதானத்தில் பிரசங்கம் செய்து வந்தார். ஒருநாள் அவ்வாறு வெட்ட வெளியில் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது இடியும் மின்னலுமாக, பெருமழை மிரட்டிக் கொண்டிருந்தது. புனிதர் கூட்டத்தைப் பார்த்து, "பயப்படாதீர்கள், மழை உங்களை ஒன்றும் செய்யாது" என்று பிரசங்கத்தை நிகழ்த்தினார். பிரசங்கம் நடந்த இடத்தைச் சுற்றி கனத்த மழை பெய்தது. வீதியில் நீர் வெள்ளமாக ஓடியது. ஆனால் பிரசங்கம் நடந்த இடத்தில் ஒரு துளி மழைகூட விழவில்லை.

## 9. கூந்தல் வளர்ந்தது :

ஒரு கணவன் தன் மனைவியை மிகவும் கொடுமைப்படுத்தி அடித்து உதைத்து, அவள் முடியைப் பிடித்து இழுத்தான். அவளது தலைமுடியெல்லாம் அவன் கையோடு வந்தது. அந்தப்பெண் அழுதுகொண்டு அந்தோணியாரிடம் சென்று முறையிட்டாள். புனிதர் பரிதாபப்பட்டு முழந்தாளிட்டு இறைவனிடம் மன்றாடினார். அப்பெண்ணின் கூந்தல் முன்போலவே வளர்ந்தது. இதைக் கண்ணுற்ற அவளது கணவன் மனம் திருந்தி நல்லவனாக வாழ ஆரம்பித்தான்.

## 10. கறை பட்ட ஆடை சுத்தமானது :

கணவனுக்குத் தெரியாமல் ஒரு பெண் அந்தோணியாரின் பிரசங்கத்தைக் கேட்கச் செல்வது வழக்கம். ஒருமுறை அவசர அவசரமாக அவள் செல்லும்போது கால் தடுக்கி கீழே விழுந்தாள். சேலையும் கிழிந்தது. சேற்றில் விழ நேரிட்டதால் ஆடையும் சேறாயிற்று. இந்தக்

கோலத்தில் வீட்டுக்குப் போனால் கணவனுடைய கோபத்துக்கு ஆளாக வேண்டும் எனப் பயந்து புனிதரிடம் சென்றாள். அந்தோணியார் இறைவனை தியானித்து அவளது ஆடையைத் தொட ஆடையிலிருந்த கிழிசல் மறைந்தது; கறையும் நீங்கியது.



## 11. கழுதை ஆராதித்த புதுமை :

யோர்னாஸ் நகரில் வாழ்ந்து வந்த கில்லார்டு என்னும் யூதன் தேவ நற்கருணையில் இயேசு நாதர் பிரசன்னமாயில்லை என்று கூறிவந்தான். இது விஷயமாக அந்தோணியாரிடம் வாக்குவாதமும் நடத்தினான். புனிதரிடம் பந்தயம் செய்தான். “என்னிடமிருக்கும் கோவேறு கழுதையை இரண்டு நாட்களுக்கு பட்டினி போட்டு மூன்றாம் நாள் கழுதைக்கு முன்பாக தேவ நற்கருணையையும், வேக வைத்த கொள்ளையும் வைக்க வேண்டும். கொள்ளைத் தின்னாமல் கழுதை தேவ நற்கருணையை வணங்கினால், நானும் என் குடும்பத்தாரும் விசுவசித்து மெய்ம் மறையில் சேருவோம்” என்று சொல்லியிருந்தான். அதன்படி கழுதை கொள்ளைப் பொருட்படுத்தாமல் தேவ நற்கருணைப் பக்கம் திரும்பி முன் கால்களை மடக்கித் தரையில் ஊன்றி ஆராதித்தது.

## 12. குழந்தையின் சாட்சி :

கோடீஸ்வரன் ஒருவனுடைய மனைவி அழகி. அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. கணவன் இது தன் குழந்தை அல்ல என்று மனைவி மேல் சந்தேகப்பட்டான். அப்பெண்மணி அந்தோணியாரிடம் இதைச் சொல்லி அழுதாள். புனிதர் அவளுடைய கணவனிடம் பேசியும் பயனில்லை. அந்தோணியார் குழந்தையைக் கொண்டுவரச் சொல்லி அதைத் தன் கரங்களில் ஏந்தி “மாசு மறுவற்ற குழந்தையே, இறைவன் பெயரால் உனக்கு கட்டளையிடுகிறேன். வாய் திறந்து பேசு” என்றார். உடனே வாய் பேச முடியாத அந்தக் குழந்தை “இதோ என் தந்தை” என்று கோடீஸ்வரனைச் சுட்டிக்காட்டியது. குடும்பத்தில் அமைதி நிலவிற்று.

## 13. சாத்தானின் சோதனையிலிருந்து விடுதலை :

ஒரு இளம் துறவி சாத்தானின் சோதனைகளால் அலைக்கழிக்கப்பட்டார். இதை அறிந்த அந்தோணியார் தனது அங்கியை அணிந்து கொள்ளும்படி கொடுத்தார். அந்தோணியாரின் அங்கியை அணிந்தவுடனே துறவி சாத்தானின் தொல்லைகளிலிருந்து விடுபட்டார்.



## 14. வேதாகமம் கிடைக்கப் பெற்றது:

அந்தோணியார் வேதாகம விளக்கவுரை ஒன்று எழுதினார். அதை ஒரு நாள் காணவில்லை. யாரோ திருடிக் கொண்டு போய் விட்டார். எல்லாரும் தேடியும் கிடைக்கவில்லை. அந்தோணியார் வேண்டிக் கொண்டார். அடுத்த நாளே அதைத் திருடிக் கொண்டு போயிருந்த ஒரு இளம் துறவி புத்தகத்தைக் கொண்டு வந்து கொர்டுத்து விட்டு புனிதரிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

# சிந்தனைக்கு

புனிதரின் வாழ்க்கைச் சுருக்கத்தை வாசித்து முடித்தபின், நமது சிந்தனைகள் தெளிய வேண்டும். உயர் லட்சியங்களுக்காக வாழ நாம் தீர்மானம் கொள்ள வேண்டும். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் இம்மண்ணை வளப்படுத்தவும், மனித இனத்தின் தரத்தை உயர்த்தவும் உழைக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழும் காலம் ஒருசில ஆண்டுகளேயானாலும், நம்க்குப்பின் நமது அடிச்சுவடுகளை விட்டுச்செல்ல வேண்டும். அதாவது, நல்ல சந்ததியையோ, நல்ல சாதனைகளையோ விட்டுச்செல்லல் வேண்டும். நல்ல சந்ததி என்று சொல்லும்போது அது நாம் பெற்ற பிள்ளைகளை மட்டும் குறிக்காது. நாம் உருவாக்கும் சந்ததியும் அதில் அடங்கும். எனவே சிந்தனைச் சிற்பிகளையும் செயல்வீரர்களையும் உருவாக்க வேண்டியது ஒவ்வொருவர் மேலும் சுமந்தப்பட்ட தலையாய கடமையாகும்.

# புனித அந்தோணியாரை நோக்கிச் செபம்



## பொதுச்செபம்

புனித அந்தோணியாரே, இயேசு குழந்தையை உம் கைகளில் ஏந்தும் பாக்கியம் பெற்றவரே. உமது கரங்களில் என் துன்ப துயரங்களையும், ஏக்கங்களையும், கவலைகளையும், மன்றாட்டுகளையும் ஒப்படைக்கின்றேன். இவ்வுலகில் உமது திரு உருவத்தை பக்தி விசுவாசத்துடன் நோக்கி மன்றாடும் இந்த அடியேனுக்கு இவ்வுலகத்தில் இறை அருளை விண்ணகத்தில் என்றென்றும் உம்மோடு இறைவனை முகமுகமாய்த் தரிசிக்கும் மேலான வரத்தையும் எனக்கு பெற்றுத் தந்தருளும். - ஆமென்.

## வியாதி நீங்கச் செபம்

புனித அந்தோணியாரே, வியாதிக்காரருக்கு ஆறுதல் தருபவரே, மரித்தோரை கடவுள் வல்லமையால் உயிர்பெறச் செய்தவரே, உமது ஊழியனின் துன்பங்களை மனமிரங்கிப் போக்கியருளும். வியாதி நீங்கி குணம் பெறச் செய்தருளும். இவர் ஆரோக்கியம் பெற்று பழையபடி மீண்டும் தம் கடமைகளைச் செய்ய நற்சுகத்தையும் சக்தியையும் கொடுத்தருளும். ஆமென்.

## காணாமற்போன பொருளைக் கண்டடையச் செபம்

பதுவை புனித **அந்தோ**ணியாரே, காணாமற்போன பொருளைக் கண்டடையச் செய்ய இறைவனிடத்தில் விசேஷ வரம் பெற்றவரே, காணாமற்போன இந்தப் பொருளைக் கிடைக்கச் செய்யும்படியாக உருக்கமாக வேண்டுகிறேன். ஏழைகளுக்கு உதவும் மனத்தையும் இறைவனுக்கு நன்றி உள்ளத்துடன் வாழும் வரத்தையும் பெற்றுத் தாரும். ஆமென்.

# சேலம் மறைமாவட்ட வரலாறு

## (சங்ககிரி பங்கின் வரலாறு)

கி.பி. 52ஆம் ஆண்டு இயேசுவின் 12 சீடருள் ஒருவரான தோமையார் இந்தியாவுக்கு வந்தார். மலபார் கடற்கரைப் பகுதியில் வந்திறங்கினார். பிறகு கோரமண்டல் பகுதிக்குச் சென்று போதித்தார்.

கி.பி. 72-இல் சென்னையில் கொலை செய்யப்பட்டார். அவர் ஒதுங்கி மறைந்து தங்கியிருந்த இடம் பரங்கி மலை - அவர் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடம் சாந்தோம் பசிலிக்கா.


பழைய கோவிலைக் கட்டிய தந்தை ரெகோடியார் வலது புதிய கோவிலைக் கட்டிய தந்தை எம். அல்போன்ஸ் இடது (மலேசியா-பினாங்கில் சந்தித்தபோது )1984-ஜூன்

கி.பி. 1459-இல் போர்த்துக்கீசியர் இந்திய நாட்டுக்கு வந்து நற்செய்தி அறிவித்தனர்.

### மதுரை மிஷன் நற்செய்திப்பணி

கி.பி. 1542-இல் சேசு சபைக்குரு பிரான்சிஸ் சேவியர் தென் இந்தியாவுக்கு வந்து மறைப்பணி ஆற்றினார்.

கி.பி.1606-இல் தந்தை ராபர்ட் தெ நோபிலி இந்தியாவுக்கு வந்து மதுரை, தஞ்சாவூர், திருச்சி முதலிய இடங்களில் நற்செய்தியை அறிவித்தார்.

கி.பி.1655-இல் தந்தை ப்ருயென்சா என்பவர் அனைக்கரைப் பாளையம் என்றழைக்கப்பட்ட வெள்ளாண்டிவலசையில் (எடப்பாடி) சிறிய கோவில் கட்டினார்.

கி.பி.1676-இல் தந்தை தேவராதர் பங்குத்தந்தையின் இல்லம் ஒன்று கட்டினார். மதுரை மிஷனிலேயே மிகப்பெரிய கோவில் ஒன்றை வெள்ளாண்டி வலசையில் கட்டி எழுப்பினார்.

கி.பி.1687-இல் அந்தக் கோவில் தீக்கிரையானது.

கி.பி.1679-இல் வெள்ளாண்டி வலசைப் பங்கில் 7 சிறிய கிளைப் பங்குகள் இருந்தன. அவை சங்ககிரி, ஓமலூர், மணலி, இளையநகர், மதியம்பட்டி, சேலம், சேந்த மங்கலம் முதலியன.



ஆக கி.பி.1679-இல் சங்ககிரி கிறிஸ்தவ விசுவாசத்தின் மைய இடமாக விளங்கியது என்பது புலனாகிறது. தற்போது கணித்தால் ஏறக்குறைய சுமார் 350 ஆண்டுகளாக கத்தோலிக்கக் கிறிஸ்துவ விசுவாசம் நிலைத்து இருந்து வரும் இடம் சங்ககிரியாகும்.



*பழைய ஆலயம் - விழாக் கோலத்தில்*

## மைசூர் மிஷன்

மைசூர் மிஷன் சேசு சபைக் குருக்கள் தர்மபுரியில் பணியாற்றிய போது தந்தை சின்னசாமி சாம்பள்ளிக்கு கி.பி.1649 - 1655-இல் வந்தார். 1680ல் மைசூர் மிஷனில் 4 பங்குகள் இருந்தன. ஒன்று கொங்கு நாட்டில், சாம்பள்ளி, குள்ளவீரன்பட்டி (மேட்டூர்), சோளப்பட்டி மல்லி குண்டம், சிக்க காவல், நங்கவள்ளி, இரண்டாவது பாலகாட்டில் கப்புநெல்லி (கப்பினகத்தி)

கி.பி. 1661-இல் தந்தை சின்னசாமி தர்மபுரிப் பங்கை ஏற்படுத்தினார்.

கி.பி.1674ஆம் ஆண்டு மைசூர் மிஷன் தோன்றிய 25 ஆண்டுகளுக்குப் பின் கப்பினகத்தியில் 300, தர்மபுரியில் 600, சாம்பள்ளியில் 400 கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்தனர்.

கி.பி. 1682-இல் மைசூருக்கும், மராத்தியருக்கும் நடந்த சண்டையில் சாம்பள்ளி, சோளப்பட்டி, பெண்ணாகரம், தர்மபுரி, மாரண்டஹள்ளி, கப்பினகத்தி முதலிய ஊர்களிலுள்ள கோவில்கள் தரைமட்டமாக்கப் பட்டன. கிறிஸ்துவர்கள், கொல்லோகால், புனித அருளானந்தர் ஏற்படுத்திய கடத்தூர் ஐயம்பள்ளி (வரதராசன்பேட்டை), கோர்தம்பேட்டை முதலிய பகுதிகளில் குடியேறினர்.



கி.பி. 1687-இல் சேலம், மதுரை நாயக்கனிடமிருந்து மைசூர் அரசன் ஆட்சியின் கீழ் வந்தது. வெள்ளாண்டி வலசை கருத்தம்பட்டி, காக்காவேரி முதலியன மதுரை மிஷனிலிருந்து மைசூர் மிஷனுக்கு வந்தன.




புனித அந்தோனியார் போர்டு

கி.பி.1690-இல் மைசூர் மிஷனில் 3 பங்குகள் மட்டும் இருந்தன. அவற்றை 7 குருக்கள் கவனித்தனர். வெள்ளாண்டி வலசையிலிருந்து தந்தை மனுவேல் டிசூசா காக்காவேரிக்கு பங்குத்தந்தையின் இல்லத்தை மாற்றினார். காக்காவேரியில் உத்தரிய மாதாப் பெயரில் கோவில் கட்டினார்.

கி.பி. 1690-இல் மைசூரில் கோனார் இனத்தவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். இதனால் வேத கலாபனை நடந்தது. பெரும் சேதம் ஏற்பட்டது. தந்தை மனுவேல் டிசூசா சிறையில் அடைக்கப்பட்டார்.

கி.பி.1699-இல் தந்தை மனுவேல் டிசூசா சிறையிலிருந்து வெளிவந்ததற்கு நன்றி விழா ஒன்றை ஆகஸ்ட் 15-ஆம் நாள் கொண்டாடினர். அவ்விழாவில் சுமார் 3000 பேர் பாவசங்கீர்த்தனம் செய்தனர் என்றும், சேலம், தர்மபுரி, அந்தியூர் பகுதிகளில் சுமார் 4800 கிறிஸ்துவர்கள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




புனித அந்தோனியார் கூடம்

கி.பி.1708-இல் முகமதியர் கிறிஸ்தவக் கோவில்களை அழித்தனர். தந்தை எம்மானுவேல் தாகூஞ்ஞா திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது

தடியால் அடித்து கொன்று போட்டனர். அவர் கொலை செய்யப்பட்ட இடம் தாசரப் பள்ளியாக இருக்கலாம்.



கி.பி. 1715-இல் பெண்ணாகரத்தில் வேத கலாபனை நடந்தது.



புனித அந்தோனியார் மன்றாட்டு

கி.பி. 1715-இல் மைசூர் மிஷனைச் சேர்ந்த சேலத்தில் 4 பங்குகள் இருந்தன. அவை : காக்காவேரி, களங்காணி, தர்மபுரி, லளிகம் முதலியன. சேலம் பகுதியில் மொத்தம் 6 குருக்கள் பணிசெய்து வந்தனர்.

கி.பி. 1717ல் தர்மபுரியில் வேதகலாபனை நடந்தது.

கி.பி.1773-இல் சேசுசபை பாப்பானவரால் தடை செய்யப்பட்டது.

சேலம் பகுதியில் நற்செய்தி பணி பாரிஸ் அந்நிய வேதபோதக சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. புதுச்சேரியைத் தலைமை இடமாகக் கொண்டு அவர்கள் பழைய மதுரை மிஷன், மைசூர் மிஷன் முதலிய இடங்களைக் கவனித்தனர்.

கி.பி. 1777-இல் புதுச்சேரியில் குருமடம் தொடங்கப்பட்டது.

கி.பி.1791-இல் மூன்றாம் மைசூர் யுத்தம் நடைபெற்றது. சேலத்தில் ராணுவ ஆட்சி வந்தது.

கி.பி.1794-இல் செப்டம்பர் மாதத்தில் ஆயர் ஷாம்பனுவா கிருஷ்ணகிரி, தர்மபுரி, சங்ககிரி, சேலம், காக்காவேரி முதலிய இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டு பங்கு விசாரணை நடத்தினார். சுமார் 3500 பேர் பாவ சங்கீர்த்தனம் செய்தனர். 1000 பேர் உறுதிபூசுதல் பெற்றனர்.

கி.பி.1794-இல் தாலக்காட்டில் காக்காவேரி, களங்காணி, வெள்ளாண்டிவலசை, பூதப்பட்டி முதலிய இடங்களிலுள்ள கோவில்களும்



1000 கிறிஸ்தவர்களும் பதுருவாதோ குருக்கள் வசம் மாறினர்.



புனித அந்தோனியார் மாடம்

கி.பி.1795-இல் அக்ரஹாரத்திலும், சடையம்பாளையத்திலும் புதிய குடியேற்றங்கள் உருவாயின. தந்தை அப்பேருவா எடப்பாடி, காக்காவேரி, கோவிலூர், தர்மபுரியிலுள்ள கோவில்களையும் பங்குத் தந்தை இல்லங்களையும் பழுது பார்த்தார். கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை, அந்தேரிப்பட்டி, சங்ககிரி, ஆத்தூரில் முள்ளுவாடி முதலிய ஊர்களில் சிப்பாய்கள் கோவில் கட்டினர்.

கி.பி.1830-இல் கொட்டம்பட்டியில் மாதாக் கோவில் கட்டப்பட்டது. புதுப்பாளையத்தைச் சேர்ந்த ஒருவர் கார்க்காவேரியில் திருப்பலி காணும் போது அற்புதமாக சுகம் பெற்றதால் தனது 3 மகன்களுடன் திருமறையில் சேர்ந்தார். கெங்கவல்லியில் காலராக் கண்ட ஒருவர் இயேசுவைக் கும்பிட்டதால் குணமடைந்தார்.

கி.பி. 1832-இல் சேலத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. சேலம் நகரத்தில் மட்டும் 28 சதவீதம் மக்கள் மடிந்தனர்.

கி.பி. 1833-இல் தந்தை ஞானாதிக்க நாதர் களங்காணிக்குப் பதிலாக கொசவம்பட்டியில் விசாரணை ஆரம்பித்து, புனித சவேரியார் பெயரில் கோவில்கட்ட அடிக்கல் நாட்டினார்.



லூர்து அன்னையின் கெபி

கி.பி.1844-இல் ஆயர் போனான் கருமத்தம் பட்டியில் கூட்டம் கூட்டி கிறிஸ்தவ சலவைத் தொழிலாளர்கள்

தாங்கள் தொழில் செய்யும் இடத்தில் இந்து மதச் சடங்குகளைச் செய்யக்கூடாது என்று கண்டித்தார். இதனால் சிலர் கிறிஸ்தவ மதத்திலிருந்து விலகினர். மற்றக் கிறிஸ்தவ பிரிவினை சபையில் சேர்ந்தனர். தந்தை பிரிக்கோ தமது பங்கை 5 பகுதிகளாக பிரித்து ஆங்காங்கே வேதியரை நியமித்தார். பேட்டைப் பாளையத்தில் பூசாரியாக இருந்த ஒரு படையாச்சி தனது இந்துக் கோவிலின் கற்களைக் கொண்டு புனித செசீலி அம்மாளுக்கு ஒரு கோவில் கட்டினான். கோட்டைப் பாளையத்திலிருந்த தந்தை கிரிமோ 1849-இல் கொல்லி மலையில் ஒரு கோவில் கட்டினார். கொல்லி மலையில் மலேரியா காய்ச்சல் கண்டு 1855-இல் தந்தை கிரிமோவும் 1856-இல் தந்தை யாகப்ப நாதரும் 1869-இல் தந்தை கோடே அடிகளாரும் மரித்தனர்.





*வேளாங்கன்னி மாதா பங்குத்தந்தையின் இல்லத்தில்*

1920-இல் ரெட்டியூரில் பிறவி முடமான பையன் அங்கிருந்த மாதாக் கோவிலில் அவனுடைய தாய் இரண்டு நாட்கள் தொடர்ந்து செபித்ததால் குணமடைந்தான்.

1930 - மே 26-இல் சேலம் மறைமாவட்டம் போப் 11ஆம் பத்தினாதரால் உருவானது. அப்போது சேலம் மறை மாவட்டம் புதுவை மறை மாவட்டத்திலிருந்து 6 பங்குகளும் - சேலம், அக்ரஹாரம், ஏற்காடு, செட்டிபட்டி, கோவிலூர், எலத்தகிரி; கும்பகோணம் மறைமாவட்டத்திலிருந்து 4 பங்குகளும் - ஆத்தூர், காக்காவேரி, கோனேரிப்பட்டி, தோலூர்பட்டி, மைசூர் மறை மாவட்டத்திலிருந்து மத்தகிரி என்ற ஒரு பங்கும் ஆக மொத்தம் 11



*கல்லறை சீரமைப்பு விழாவில் கலந்து கொண்ட திருத்தந்தையர் சங்ககிரி - 20-03-1996*



பங்குகளைக் கொண்டு உருவானது. 1943-இல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் உத்தரவின்படி மேட்டூர், சவேரியார் பாளையம், சேலத்துடன் சேர்க்கப்பட்டன.



பழைய ஆலயத்தின்
பழுதடைந்த வடபகுதி

1930-இல் சேலம் மறைமாவட்டத்தில் 17,600 கிறிஸ்தவர்களும் 76 பள்ளிகளும், 26 குருக்களும், 45 கன்னியர்களும், 13 பங்குகளும் இருந்தன. 1930 செப்டம்பர் 14-இல் தந்தை ஹென்றி ப்ருனியெர் சேலம் ஆயரானார். 1931-இல் புனித சவேரியார் சிறிய குருமடத்தை ஸ்தாபித்தார். கடகத்தூர், எடப்பாடி, ந.பள்ளிப்பட்டி, கிருஷ்ணகிரி, அக்ரஹாரம், மதகொண்டப்பள்ளி முதலிய பங்குகளை நிறுவினார். நாமக்கல் திருச்செங்கோடு வட்டாரத்தில் 45 கிராமங்களில் புது கிறிஸ்தவர்கள் பகுதியில் ஆயர் அதிகக் கவனம் செலுத்தினார்.

திருச்செங்கோடு குமாரமங்கலத்திலிருந்த புதுக்கிறிஸ்தவர்களை மீண்டும் இந்துக்களாக மதம் மாறும்படியாக மூதறிஞர் இராஜாஜி கேட்டுக்கொண்டார். விருந்துக்கு ஒரு ஆடும், நூறு ரூபாயும் கொடுக்கிறேன் என்றும் சொன்னார். அதற்கு மக்கள், “எங்கள் குருக்கள் எங்கள் வீட்டில் உட்கார்ந்து எங்கள் சாப்பாட்டை உண்பது போல், நீங்களும் செய்வீர்களா?” என்று கேட்டனர். ராஜாஜியும் மற்றவரும் பேசாமல் வந்த வழியே திரும்பிப் போய் விட்டனர். புதுக் கிறிஸ்தவர்கள் இருந்த திருச்செங்கோடு வட்டாரத்தில், குமாரமங்கலமும், நாமக்கல் வட்டாரத்தில் மாரப்பன் நாயக்கன் பட்டியும் முக்கிய மையங்கள். குமார மங்கலத்தில் 1967ஆம் ஆண்டும், மாரப்பன் நாயக்கன்



ஆயரும் பங்குத்தந்தையும்
சங்ககிரி மலையும்
11.12.2000

பட்டியில் 1975ஆம் ஆண்டும் தந்தை M. அல்போன்ஸ் புதிய கோவில் கட்டினார். குமாரமங்கலம் கோவிலைப் பாப்பரசரின் பிரதிநிதி மேதகு நாக்ஸ் அவர்கள் டில்லியிலிருந்து வந்து மந்திரித்தார் . என்பது குறிப்பிடத்தக்கது. ஆயர் ஹென்றி ப்ருனியெர் 1949இல் ஓய்வு பெற்று 16.3.57-இல் இறந்தார். சேலத்தின் இரண்டாம் ஆயர் மேதகு வெண்மணி செல்வநாதர், மண்ணின் மைந்தர். 1.5.49-இல் ஆயராக ஆனார். அப்போது சேலம் மறைமாவட்டத்தில் 38,480 கிறிஸ்துவர்களும் 50 குருக்களும், 50 தேவாலயங்களும் 28 பங்குகளும், 110 கன்னியர்களும், 58 பள்ளிகளும் இருந்தன. மரியாயின் சேனை, கத்தோலிக்க சங்கம் முதலியவைகளை ஏற்படுத்தினார். செட்டிபட்டியில் தொழுநோய் இல்லத்தை நிறுவினார். 15 புதுப் பங்குகளை உருவாக்கினார். 1973-இல் பேராயராக புதுச்சேரி சென்றார். அப்போது சேலம் மறைமாவட்டத்தில் 74 குருக்களும் 352 கன்னியர்களும் இருந்தனர்.





புத்தாலயம் கட்டப்படப்போகும் இடத்தை ஆயர் மந்தரித்தல்
11.12.2000

சேலத்தின் மூன்றாம் ஆயர் மேதகு மைக்கேல் போஸ்கோ துரைசாமி. 1974 முதல் 1999 வரை 25 ஆண்டுகள் பணியாற்றினார். 30 ஆலயமும் 43 சிற்றாலயங்களும் 20 பங்குத்தந்தை இல்லங்களும், 15 பள்ளிகளும் கட்டப்பட்டன. 27.11.91-இல் செவ்வாய் பேட்டையை மாற்றி அரிசி பாளையத்தில் குழந்தை இயேசு பேராலயத்தைக் கட்டினார். 1997 ஜனவரி 24இல் தர்மபுரி புது மறைமாவட்டம் சேலத்திலிருந்து பிரிக்கப்பட்டு 24.4.97-இல் அதன் முதல் ஆயராக மேதகு ஜோசப் அந்தோணி இருதயராஜ் பொறுப்பேற்றார். சேலத்திலிருந்த 57 பங்குகளில் 22 பங்குகள் தருமபுரிக்குச் சேர்ந்தன. அதன் பின் சேலத்தில் 3 புதிய பங்குகள் உருவாயின. தற்போது சேலம் மறை மாவட்டத்தில் 38 பங்குகள் உள்ளன. இதில் மிகப்பழமையான பங்கு எடப்பாடி (1676) மிகப் புதியது உடையாப் பட்டி (1998). 1999, ஜூன் 9ஆம் நாள் ஆயர் மைக்கேல் காலமானார்.



சேலத்தின் நான்காம் ஆயர் மேதகு சிங்கராயன். 2000 அக்டோபர் 18ஆம் நாள் சேலத்தின் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். தற்போது சேலம் மறைமாவட்டத்தில் உள்ள

மொத்தக் குருக்கள் - 97
மேற்றிராசனக் குருக்கள்- 72
பங்கு நிர்வகிக்கும் துறவறக் குருக்கள் - 2
வெளிக் குருக்கள் - 5
தியாகோன் - 1
மொத்தப் பங்குகள் - 38
கத்தோலிக்கர் எண்ணிக்கை - 80,500

# சங்ககிரியைப் பற்றிய குறிப்புகள்

1679-இல் எடப்பாடி என்ற அணைக்கரைப்பாளையம் பங்குத் தலைமை இடமாகவும், சங்ககிரி அதில் ஒரு சிறு கிளை பங்காகவும் இருந்திருக்கிறது. இது மதுரை மிஷனரிகள் பணியாற்றும் போது 1794-இல் மைசூர் மிஷன் பொறுப்பில் இருந்த போது, ஆயர் ஷாம்பனுவா சங்ககிரிக்கு வருகை தந்து பார்வையிட்டுப் பங்கு விசாரணை நடத்தியுள்ளார். 1795-இல் சிப்பாய்கள் சங்ககிரியில் கோவில் கட்டினர்.



*ஆலயம் கட்டும் பணியை ஆயர் துவக்கி வைத்தல்*
*11.12.2000*

சங்ககிரி டவுனில் N.H 47 ரோட்டில் பழைய ATC க்கு அருகில் ரோட்டை ஒட்டி வடபுறமாகக் கத்தோலிக்கக் கிறித்துவக் கல்லறை உண்டு. அங்கே சுற்று வட்டாரத்துக் கிறிஸ்தவர்கள் புதைக்கப்பட்டு வந்தனர். அதில் 1897 அக்டோபர் 10இல் புதைக்கப்பட்ட கல்லறை உண்டு. அந்தக் கல்லில் தேதியும் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கிறது.



சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு (1935 - 40) இதுவரை இருந்து வந்த புனித அந்தோணியார் ஆலயம் தந்தை ரெகோட்டியார் அவர்களால் கட்டப்பட்டதாக மக்கள் கூறுகிறார்கள். இந்தக் கோவில் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தது. எனவே 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

2000-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி புதிய கோவில் தரைமட்டம் மந்திரிக்கப்பட்டது. 17ஆம் தேதி அஸ்திவாரப்பணி தொடங்கியது. அஸ்திவாரம் தோண்டுவதற்கு மண்பகுதியே இல்லை. எல்லாம் மொட்டைப் பாறைப்பகுதி. எனவே 288 துளைகள் பாறைகளில் துளைக்கப்பட்டு கான்கிரீட் பீம் கட்டப்பட்டு அமைந்தது கோவில். பாறைமேல் கட்டப்பட்டிருக்கும் கோவில் என்ற சிறப்பு வாய்ந்தது. அளவு 100x30 அடி. 13 இலட்ச ரூபாயில் கட்டப் பட்டுள்ளது. பங்குத்தந்தை M. அல்போன்ஸ் ரோமையிலுள்ள விசுவாசப் பரம்புதல் சபைக்கு 1999 அக்டோபர் மாதம் விண்ணப்பித்தார். அதன்படி 2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரூ.8.92 இலட்சம் பணஉதவி கிடைத்தது. அத்துடன் பங்கு மக்களும் இன்னும் அந்தோணியார் பக்தர்களும் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளித்துள்ளனர். விசுவாசப் பரம்புதல் சபை நன்கொடையாளருக்குப் பங்கு மக்களின் நன்றி என்றென்றும் உரித்தாகுக. கி.பி.2001 மே 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு, சேலம் ஆயர் சிங்கராயன் அவர்கள் சங்ககிரி பங்கின் பாதுகாவலரான புனித அந்தோணியார் ஆலயத்தை மந்திரித்தார். புதிய கோவிலில் பழைய கோவிலின் மணியும், புதிதாக 26 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு புதுமணி ஒன்றுமாக இரண்டு மணிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. புதிய கோவில் ஐந்தே மாதங்களில் கட்டப்பட்டது.



*புத்தாலயம் கட்டும் பணியை*
*பங்குத்தந்தை ஆரம்பித்தார்*
*11.12.2000*



பங்குத்தந்தை M. அல்போன்ஸ் அவர்களின் நீண்ட நாள் கனவும், முயற்சியும் வீணாகவில்லை. அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறின. மக்களுடைய நீண்டநாள் தேவையும், குறையும் நீங்கின. பங்குத்தந்தையும் பங்கு மக்களும் பட்ட கஷ்டங்களுக்கு இறைவன் நல்ல பரிசு அளித்தார். பங்கு மக்களும், உள்ளூர் வெளியூர் பக்தர்களும் புதிய கோவில் கட்டுவதற்காக மனமுவந்து அளித்த கட்டிட நிதிக்காக, புனித அந்தோணியார் அவர்களுக்கு பன்மடங்காக ஆசீர்வதிப்பார் என்பது திண்ணம். சங்ககிரி புனித அந்தோணியார் திருத்தலம் இன்னும் புகழ் பெற்று விளங்கட்டும். புனித அந்தோணியாரின் வல்லமையும் சக்தியும் எங்கும் பரவட்டும். எல்லா மக்களும் பயன் பெறட்டும். எல்லா மகிமையும் புகழும் என்றென்றும் இறைவனுக்கே.



ஜல்லி குவியல்

பல்லாண்டு காலமாக சங்ககிரி வட்டாரம் எடப்பாடி பங்கைச் சேர்ந்திருந்தது. 1975-ஆம் ஆண்டு சங்ககிரி தனிப்பங்காக ஆக்கப்பட்டது. சங்ககிரியிலிருந்து பவானி ரோட்டில் ஐந்தாம் கிலோ மீட்டரில் இந்தியா சிமெண்ட்ஸ் என்ற சிமெண்ட் பேக்டரி ஒன்று உண்டு. அதை அடுத்து கீழபுறத்தில் ரோட்டை ஒட்டி சங்ககிரி பங்குக்கு சேர்ந்த கிளைக்கோவில் ஒன்று உண்டு. அது சிமெண்ட் தொழிற்சாலையில் பணிபுரியும் கிறிஸ்தவர்களின் வசதிக்காக 27-06-1980இல் கட்டப்பட்டது. சங்ககிரி பங்கு ஒரு சிறிய பங்குதான். பங்கு மக்களின் எண்ணிக்கை சுமார் ஆயிரம் பேர். பங்குக்கு பள்ளியோ, கான்வென்ட்டோ ஒன்றுமில்லை. சங்ககிரி பங்கு எல்லாவகையிலும் முன்னேற வேண்டியுள்ளது. சங்ககிரி பங்கின் புத்தாலயம் வந்ததும் புதுயுகம் பிறக்கட்டுமே!



தரை மட்டத்துக்கு மண்

# சங்ககிரி மலையின் சிறப்பு

சேலம் மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் தலைநகராய் விளங்குகிறது சங்ககிரி. சேலம் பவானி 47ஆம் தேசீய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. சேலத்திலிருந்து மேற்குத் திசையில் 40ஆம் கி.மீட்டரிலும் பவானியிலிருந்து கிழக்கே 20ஆம் கிலோ மீட்டரிலும் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம் சங்ககிரி நகரமாகும். இது சங்கு மலை, குன்னத்தூர் (குன்றத்தூர்), சங்கிலி மலை, சங்ககிரி துர்க்கம் என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்பட்டு வந்த நகரம். தற்போது சங்கரி என்று சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. ஆங்கிலேயர் காலத்திலும் ஹைதர் அலி, திப்புசுல்தான் காலத்திலும்கூட சங்ககிரி ஒரு பெருநகராய் விளங்கிற்று. கி.பி.13ஆம் நூற்றாண்டிலேயே சங்ககிரி கொங்கு நாட்டின் முக்கிய நகரமாய் விளங்கியதற்கு முக்கிய சான்றுகள் உள்ளன. 16ஆம் நூற்றாண்டில் இந்த ஊர் குன்னத்தூர் என்ற பெயரைக் கொண்டிருந்தது. கி.பி.1522ஆம் ஆண்டு திருச்செங்கோட்டில் உள்ள கல்வெட்டில் குன்னத்தூர் துர்க்கம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சங்ககிரி மலைக்கோட்டை அநேகமாக 13 - 14ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டிருக்கலாம் எனச் சான்றுகள் கூறுகின்றன. மன்னர் காலத்து எல்லைப்படை வீரர்களையும், போர்க் கருவிகளையும், வரலாற்றுச் சின்னங்களையும், தங்க நாணயங்களையும், தானிய வகைகளையும் தேக்கி வைத்துப் பாதுகாப்பு கொடுத்த சிறந்த மலை சங்ககிரி மலையாகும்.



அடி மட்டத்துக்கு மேல்

**சங்ககிரி மலையின் முக்கிய அம்சங்கள் :**

1. யானைப்பாதை 2. குதிரைப்பாதை 3. வெடிகுண்டு கிடங்குகள்



4. சுரங்கப் பாதை வழிகள் 5. ஆள் இறக்கிறான் குழி (தண்டனைக் குழி) 6. மலையின் உச்சி 7. பொழுது காணாபாழி 8. மோர்காரி பாதை 9. பிணம் உருட்டி சரிவு 10. முஸ்லீம் தர்கா, அதன் பின்புறம் ஒரு சுரங்கவழி 11. இராணிகள் நீராடும் குளங்கள் 12. பீரங்கிகள், துப்பாக்கிகள் வெடிக்கத் துவாரம் வைத்து கட்டப்பட்ட அரண்கள் 13. இடி விழுந்தான் குண்டு 14. நெல் குத்தி மண்டபம் 15. பீரங்கிக் குண்டுகள் பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதக் கிடங்கு முதலியன.

தீரன் சின்னமலை என்பவன் தூக்கிலிடப்பட்ட இடம் சங்ககிரி மலை. மேலப்பாளையத்தில் 1756ஆம் ஆண்டு சின்னமலை என்ற தீர்த்தகிரி பிறந்தான். தந்தையின் 4 பிள்ளைகளில் இவன் இரண்டாம் மகன். ஹைதர் அலி மைசூர் மன்னனாக கி.பி.1760ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது கொங்கு நாடு அடிமைப்படுத்தப்பட்டது. சங்ககிரியை மையமாகக் கொண்டு ஹைதர் அலியின் பிரதிநிதி கொங்கு நாட்டு மன்னர்களிடமிருந்து கப்பம் வசூலித்து வந்தான். ஹைதர் அலியின் மரணத்துக்குப் பிறகு திப்பு சுல்தான் ஆட்சிக்கு வந்தான். திப்புவின் படையில் சின்னமலை சேர்ந்து பயிற்சி பெற்றான். விரைவில் திப்புவின் ஒரு படைப்பிரிவின் தளபதியானான். சின்னமலை கோவையில் இருந்து கொண்டு கொங்கு நாட்டின் மன்னனாக ஆட்சி செய்தான். சங்ககிரி மலைக்கோட்டையை மையமாக வைத்துக்கொண்டு வெள்ளையர் படைக்குக் கர்னல் மேக்ஸ் வெல் தலைமை ஏற்று, சின்னமலையுடன் போரிட்டான். 1804ஆம் ஆண்டு சின்னமலை வெற்றி கண்டான். இதனால் வெள்ளையர் ஆவேசம் கொண்டு திப்புவை வென்ற கர்னல் ஹாரிஸ் என்பவனைச் சங்ககிரிக்கு வரவழைத்து, தீவிர ஆலோசனை நடத்தினர். கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்த ஒரு எட்டப்பனைப் போல சின்னமலையை அவனது சமையல்காரன் வெள்ளையருக்குக்



*புதிய கோவிலின் கூரைக்கு கான்க்ரீட் போடுதல்*



காட்டிக்கொடுத்தான். இவ்வாறாகச் சின்னமலையை வெள்ளையர் சூட்சமாகப் பிடித்துக் கையில் விலங்கிட்டு, சங்ககிரி மலைக்கோட்டைக்கு இழுத்துச் சென்றனர். இறுதியாக சங்ககிரி மலை மீதுள்ள கிணற்றுக்கு அருகே புதிதாக அமைக்கப்பட்ட தூக்கு மேடையில் சின்னமலையும் அவனது இரண்டு சகோதரர்களும் 31.7.1805ஆம் ஆண்டு ஆடி மாதம் 18ஆம் தேதி தூக்கிலிடப்பட்டனர். கொங்கு நாட்டில் மூன்று முறை வெள்ளையரை எதிர்த்து வெற்றி கண்ட சின்னமலை "தீரன் சின்னமலை" என்று அனைவராலும் போற்றப்படுகின்றான்.

சங்ககிரி மலையின் உயரம் 2345 அடி. ஒரு வறண்ட பாறையினால் ஆனது. பார்ப்பதற்கு சங்கு போல் காணப்படுவதால் "சங்கு மலை" என்று அழைக்கப்பட்டது. இந்துப் புராணக் கதைகளின்படி கடலைக் கடைந்த போது சங்கு வந்ததாகவும் அது முதலாவதாக



*ஆலய கட்டிடக் கலைஞர்கள்*

விஷ்ணுவுக்கு கிடைத்ததாகவும் அதை கடற்சிற்பி சாத்தான் சங்கசுரா திருடிக் கொண்டதாகவும் கிருஷ்ண தேவன் அந்தச் சங்கசுராவை வீழ்த்திச் சங்கை அவனிடமிருந்து கைப்பற்றித் தனது பணிக்காக வைத்துக் கொண்டதாகவும், அதனால்தான் இந்நாள் வரை கோவில் வழிபாட்டிலும் போர் சமயங்களிலும் சங்கு ஊதப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இம்மலைக்குச் சங்கிலி மலை என்றும் பெயர். குற்றவாளிகளை அரசர்கள் மலையிலுள்ள பாறைகளில் சங்கிலி கொண்டு விலங்கிட்டு வைப்பார்களாம். புராணக்கூற்றின்படி குர்மனாதி கொடுமுடி என்னும் பெயர் கொண்ட இமயமலைச் சிகரத்தின் ஐந்தில் ஒரு துண்டு சங்ககிரி மலை



என்றும் வாயுவுக்கும் ஆதிசேஷனுக்குமிடையே நடந்த சண்டையில் இம்மலைத்துண்டு கீழே சிதறி விழுந்ததாகவும் அது புனிதப்சு காமதேனுவால் அர்ச்சிக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகின்றது.

சங்கிலி மலை என்று அழைக்கப்பட்டதற்கு இன்னும் ஒரு காரணம் முஸ்லீம் பெரியவர் ஒருவர் இம்மலையில் சங்கிலி வீசி, தீய சக்திகளை விரட்டியதாகவும் கூறப்படுகிறது.

சங்ககிரி மலைமேல் சங்ககிரி துர்கம் என்னும் கோட்டை அமைந்துள்ளது. தவிர சென்னகேசவப் பெருமாள் பெயரில் ஒன்றும் வரதராஜப்பெருமாள் பெயரில் ஒன்றுமாக மொத்தம் இரண்டு இந்துக் கோவில்களும் புத்தச் சின்னங்களும், ஒரு முகமதியர் வழிபாட்டு இடமும் உள்ளன. மலை அடிவாரத்தில் சோமேஸ்வரசாமிக்கு ஒரு சிவ ஆலயமும் உண்டு. ஆதியில் மலைமேல் வசந்த வல்லபராஜ பெருமாளுக்கு ஒரு விஷ்ணு கோவில் கட்டப்பட்டிருந்தது. பிறகு கி.பி.1790இல் அந்தக் கோவில் சங்ககிரி டவுனில் மாற்றிக் கட்டப்பட்டது.



*புத்தாலயமும் பழைய ஆலயமும் சங்ககிரி மலையும்*

சங்ககிரிப் பட்டணம் சங்ககிரி மலை அடிவாரத்தின் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ளது. இந்தப் பட்டணம் சங்ககிரி மலையின் பெயர் கொண்டு விளங்கி வருகிறது. சங்ககிரி டவுனுக்கு சங்ககிரி மலை மேல் உள்ள துர்கம் என்ற கோட்டையையும் இணைத்து, சங்ககிரி துர்கம் என்ற பெயர் அமைந்துள்ளது.

சங்ககிரி கி.பி.1544 வரை குன்னத்தூர் என்று அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அதாவது குன்றத்து - ஊர் - குன்றை அடுத்துள்ள ஊர் குன்னத்தூராக மருவியது. கி.பி.1784 - 1786 வரை

திப்புசுல்தான் ஆண்டபோது முசுப்ராபாத் என்று சங்ககிரி அழைக்கப்பட்டது. தற்போது சுருக்கமாக சங்கரி என்று அழைக்கப்படுகிறது.



மாவட்டத்தின் முக்கிய நகரமாகச் சேலம் மாறும்வரை சங்ககிரிதான் அரசியல், மிலிடரி முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. சங்ககிரிதான் கவர்னர்கள் வாழும் இடமாக இருந்தது. கி.பி.1538இல் கும்மால் அன்னகல், 1540-இல் ராமப்ப நாயக்கன், 1544-இல் தந்து பாவப்பையன் கவர்னர்களாக இருந்தனர். கி.பி.1717-இல் தொட்ட கிருஷ்ண தேவராஜா சங்ககிரியில் மைசூர் பிராமணர்களுக்கென ஒரு காலனியை ஏற்படுத்தினார். அப்போது எட்டு மனைவிகளுடன் திருமண விழா நடத்தி சங்ககிரிக்கு சுப்ராத்திமா கிருஷ்ணராஜபுரம் என்று பெயரிட்டார். கி.பி.1790-இல் திப்பு சுல்தானின் தளபதி அமில்தார் வசிக்கும் இடமாக ஏற்படுத்தப்பட்டது. அதே வருடம் ஆங்கிலேய ஓவியர்கள் இருவர் - தாமஸ், வில்லியம் டேனியல் என்பவர்கள் சங்ககிரி மலைக்கு வருகைத் தந்து மலையின் கோட்டையை ஓவியமாகப் பல கோணங்களில் தீட்டினார்கள். 1790-இல் லெட்டினன்ட் கர்னல் ஸ்டூவர்ட் தலகாட் வட்டாரத்தின் தலைமை இடமாக சங்ககிரி துர்க்கத்தை 22ஆவது சென்னை பட்டாலியன் இல்லமாக ஆக்கினார். சங்ககிரி மலையில் உள்ள பழைய கட்டிடங்களும், விஷ்ணு கோவிலும், போர் தளவாடங்கள் வைக்கும் இடமாகவும், வெடிகுண்டு இன்னும் உணவு தானியங்கள் வைக்கும் இடமாகவும் மாறின. கம்பெனியின் 5 பிரிவுகள் சேலம், நாமக்கல் ஆத்தூர் கோட்டைகளில் முகாமிட்டன. 1816க்களில் நாலாவது திண்டுக்கல் சுதேச முதியோர் பட்டாலியனின் ஒரு பாகமாகக் குறைக்கப்பட்டது. 1823-இல் கேப்டன் ஜார்ஜ் சேலத்துக்கு மாற்றப்பட்டபோது சங்ககிரியின் மிலிடரி முக்கியத்துவம் இன்னும் குறைந்தது. அதன் பிறகு தால்காட் வட்டாரத்துக்கு, சேலம்



உயர்ந்தெழும்பும் ஆலயம்



மாநகர் மிலிடரி முக்கிய தலமாக மாறியது. 1823 வரை சங்ககிரி ஒரு கன்டோன்-மென்ட்டாக இருந்தது. அதன் பின் சிறிது சிறிதாக மிலிடரி தளம் முழுதும் கைவிடப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் சங்ககிரி ஒரு கோடை வாசஸ்தலமாக கருதப்பட்டது. நல்ல காற்றோட்டமும், மற்ற இடங்களைவிட உடலுக்கு உகந்த சீதோஷ்ணமும் கொண்டதாக விளங்கியது. பால்பாவி என்ற கிணறு சுகம் தரும் நீரைக் கொண்டிருந்தது. சென்னையிலுள்ள ஆங்கிலேய கவர்னருக்கு இந்தப் பால்பாவி நீர் குடிக்க எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுற்று வட்டாரங்களிலிருந்து நோயாளிகளும் மற்றவரும் ஆரோக்கியத்திற்காகச் சங்ககிரிக்கு வருவார்கள். இந்தக் கிணற்று நீரைப் பருகுவார்கள். அழகான படிகட்டுகள் உள்ள நாகபாவி (நல்ல பாம்பு கிணறு) அங்கு உண்டு. ஒரு பெண்ணும், துப்பாக்கியுடன் நிற்கும் ஆணும் சித்தரிக்கப்பட்ட நடுகல் என்ற குட்டை உண்டு.

1905-இல் சுகாதார அமைப்பு உண்டாக்கப்பட்டது.

1915இல் அது பஞ்சாயத்தாக விரிவானது.

| | |
|---|---|
| 1881இல் மக்கள் தொகை - | 1747 |
| 1961இல் மக்கள் தொகை - | 6430 |
| 1971இல் மக்கள் தொகை - | 14008 |
| 1981இல் மக்கள் தொகை - | 18972 |
| 1991இல் மக்கள் தொகை - | 32992 |

சங்ககிரி மலையிலுள்ள கோட்டை (துர்கம்) வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாகவும், மிலிடரி முக்கியத்துவம் பெற்றதாகவும் விளங்கிற்று. சங்ககிரி துர்கம் என்ற பெயர் சங்ககிரி டவுனுக்கு உபயோகப்பட்டு வந்தது. மலையிலுள்ள கோட்டை பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் மதுரை அரசன் விஸ்வநாத நாயக்கரின் படைத்தளபதி அரியநாதர் என்பவனால் கட்டப்பட்டது. அவனுக்குப்பிறகு வந்த அரசர்கள் கோட்டையை விரிவுபடுத்தி, பலப்படுத்தி மிகப்பாதுகாப்பான கோட்டையாகக் கட்டினார்கள். மைசூர் போர்களில் சங்ககிரி கோட்டை மிக முக்கிய பங்கு வகித்தது. சங்ககிரி மலை உச்சிக்கு 1600 படிகள் உள்ளன. தவிர பாதுகாப்பு வழிகள் 10 அமைந்துள்ளன.

1. உலிமுகவாசல் - புலி முகம் கொண்டது. சங்ககிரி வட்டாரத்தின் வேட்டுவர் தலைவனாக இருந்த குன்னி வேட்டுவன் என்பவன் இவ்வாசலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது.



2. திட்டி வாசல் (கால் கொம்பை வாசல் (அ) கள்ள வாசல் , ரகசிய வழி எனப் பொருள்படும்.

3. கடியார வாசல் (கடிகார வாசல்)

4. ரண் மண்டல வாசல் (ரத்தம் சிந்தும் வாசல்)

5. புதுக்கோட்டை வாசல். இங்கு இரண்டு காவல் அரண்களைத் திப்புசுல்தான் கட்டினான். அருகில் 35 அடி உயரமுள்ள குகை உண்டு. இதற்கு முகமதிய புனிதர் பெயர் இடப்பட்டுள்ளது. ஹைதர் அலி 1721-இல் இக்குகையைக் கண்காணிக்க ஏற்பாடு செய்திருந்தான். அதே குகைக்கு கவுண்டன்யா ரிஷி என்ற இந்து சன்னியாசியின் பெயரும் உண்டு.

6. ரோக்கல் திட்டி வாசல் (இரண்டாவது ரகசிய வழி)

7. பூவல் திட்டி வாசல்

8. இடிவிழுந்தான் குண்டு வாசல் ( சுமார் 40 அடி நீளமுள்ள பெரிய பாறை இடியினால் தாக்கப்பட்டு மேலிருந்து கீழாக இரண்டாகப் பிளக்கப்பட்டது. 1880-இல் இப்பாறை பாதுகாப்பு காரணமாக உடைக்கப்பட்டு விட்டது).

9. வெள்ளைக்காரன் வாசல் - திப்புசுல்தான் மீது ஆங்கிலேயர் கம்பெனி 1799-இல் இறுதி வெற்றி கொண்டதின் ஞாபகமாகக் கட்டப்பட்டது. இந்த வாசலிலிருந்து 60 படிகள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. 30 படிகள் இன்னும் தெரிகின்றன. மீதி 30 படிகள் மண்ணில் மறைந்துள்ளன.

10. மைசூர் வாசல் - ஒரு மைசூர் அரசனால் கட்டப்பட்டது. இந்தக் கோட்டைச் சுவரின் தென் மேற்கில் ஒரு சிறிய வாசல் உண்டு. மோர் திட்டி வாசல். இதுவும் ஒரு ரகசிய வாசல், ஒரு கொங்கு வெள்ளாளப் பெண் இவ்வழியாகச் சிப்பாய்களுக்கு மோர் கொண்டு போவாளாம்.

மலை உச்சியில் ஒரு சிறிய விஷ்ணு கோவில் உண்டு. சென்னகேசவ பெருமாளுக்குக் கட்டப்பட்டது. அங்கே தமிழ், தெலுங்கு,



கன்னடம் ஆகிய மும்மொழிகளில் கல்வெட்டுகள் உள்ளன. கோவிலுக்கு அருகில் பல பாறை நீர்த்தேக்கங்கள் உள்ளன. அதில் சிறப்பு வாய்ந்தது மான் சுனை. அதன் பாறை விளம்புகள் எவ்வளவுக்கு நீண்டு அமைந்துள்ளன என்றால், சூரியஒளி அச்சுனையின் நீரில் எப்போதும் படாது. இந்த நீர் நல்ல சுகம் கொடுக்கும் மூலிகை வகைகள் கொண்ட நீர். அந்த தண்ணீரைத்தான் சிப்பாய்கள் அருந்தி வந்தார்கள். சற்று அப்பால் தஸ்தகிர் மோஸ்க் என்ற முகம்தியத் தொழுகைக் கோவில் உண்டு. அதற்குப் பக்கத்தில் செதுக்கப்பட்ட காலடிகள் பாறையில் உள்ளன. இவை புத்தசமயத்தைச் சார்ந்தவையாக கருதப்படுகின்றன. நெல் மற்ற தானிய வகைக் கிடங்குகளும் அங்குள்ளன. செங்கற்களால் கட்டப்பட்ட மூன்று அறைகள் கொண்ட கட்டிடம் உண்டு. அதில் எண்ணெய், வெண்ணெய், தேன் தனித்தனி அறைகளில் சேமிக்கப்பட்டு வந்தன.

மலை உச்சியில் கொடியேற்றும் வசதி கொண்ட தளம் உள்ளது. அதன் வடக்கில் 8 அடி நீளம், 6 அடி அகலம், 12 அடி ஆழமுள்ள ஆரியகுழி உள்ளது. இதற்கு ஆள் இறக்கும் குழி என்று பெயர். இதில் குற்றவாளிகளை இறக்கி விட்டு மேலே கற்பலகைகளால் மூடிவிடுவார்களாம். மூன்று நாளுக்குப்பின் பிணத்தை கொக்கியால் எடுத்து விடுவார்களாம். மேலும் வெவ்வேறு தண்டனைகளை நிறைவேற்றும் இடங்களும் அங்குள்ளன. 1. தோலுரிச்சான் மேடு. அந்த மேட்டில் குற்றவாளிகள் உயிரோடு தோலுரிக்கப்படுவார்கள். 2. தொங்க விட்டான் குகை - அங்குக் குற்றவாளியைத் தலைகீழாகத் தொங்க விடுவார்கள். 3. உருட்டி விட்டான் பாறை - மேலே சமமான பாறை பிறகு பாறை சரிந்து கிடு கிடு பாதாளம் இருக்கும். மேற்பாறையிலிருந்து ஆளை உருட்டி விடுவார்களாம்.

சங்ககிரி துர்கம் என்னும் பெயரில் சங்ககிரி பட்டணத்திலிருந்து தெற்கே 3 கி.மீ. தூரத்தில் ரயில் நிலையம் உண்டு. 1861-இல் சேலத்திலிருந்து சங்ககிரி வரை இரயில் பாதை நீட்டிக்கப்பட்டது. 1862-இல் கோயம்புத்தூர் வரை ரயில் பாதை போடப்பட்டது. 1950 வரை காவேரிக் கரைப் பகுதியில் விளைந்த வெற்றிலை வட இந்தியாவுக்கு ஏற்றுமதி ஆக சங்ககிரி ரயில் நிலையம் மிக முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் அலெக்சாண்டர்ரீடு என்பவர் சங்ககிரியில்



நாணயம் அச்சிடும் சாலை ஏற்படுத்த ஆலோசனை கூறியிருந்தார். ஆனால் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது என உறுதியாகச் சொல்லமுடியாது.

கி.பி.1795-இல் திப்பு சுல்தான் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஆபே திபுவா என்னும் பிரெஞ்சு குருவானவர் சேலம், தர்மபுரி இரண்டையும் சேர்த்து ஒரே பங்காக நிர்வகித்து வந்தார். திப்பு சுல்தான் இறந்த பிறகு சுல்தானின் ராஜ்ஜியம் முழுவதிலும் அடங்கிய கிறிஸ்தவ சமுதாயம் ஆபேதுபுவா-[illegible]புக்கு வந்தது.

கி.பி.180[illegible] இந்தியாவிலேயே முதல் முதலாக சங்ககிரியில் [illegible]மை ஊசி போட்ட பெருமை ஆபேதுபுவா அடிகளைச் சாரும். அப்போது 25432 பேருக்கு பெரிய அம்மை ஊசி போட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. திப்பு சுல்தான் கி.பி.1784 முதல் 1799 வரை ஆட்சி செய்தான். அவன் கிறிஸ்தவர்களை மிகவும் கொடுமைப் படுத்தினான். ஏனெனில் கிறிஸ்தவர்கள் ஆங்கிலேயரை ஆதரித்து வந்தனர் என்று சந்தேகித்தான். ஆபேதுபுவா கி.பி. 1792-இல் இந்தியாவுக்கு வந்து 25 ஆண்டுகள் பணியாற்றினார். திப்புசுல்தான் வெள்ளையருக்குக் கையளித்த பகுதியில் பணியாற்றினார். சிப்பாய்கள் 1795-இல் சங்ககிரியில் மாதா கோவில் கட்டிக்கொடுத்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆங்கிலேயச் சிப்பாய்களைத்தான் குறிக்கிறது என்பது விளங்கும்.

ஒரு காலத்தில் ஓஹோ என்று சீரும் சிறப்பும் வாய்ந்து விளங்கிய சங்ககிரி மலை, இன்று சீர்குலைந்து கேட்பாரற்று பாழடைந்து காட்சி அளிக்கிறது. இதை ஒரு சுற்றுலாத்தளமாக மாற்ற பொதுமக்களும் மாநில அரசும் முயற்சி எடுத்தால், மீண்டும் இம்மலை உயிர் பெற்று எழும்.



## எனது நூல்கள்

1. பிரெநீஸ் மலைச் சாரலிலே - 20.01.1984
2. கல்வாரிக்குச் செல்வோம் வாரீர் - பெப். 1984
3. புனித அந்தோனியார் நவநாள் செபம் - 08.12.1999
4. ஐரோப்பாவில் அன்னையின் திருத்தலங்கள் - 01.01.2000
5. அன்னையின் அரவணைப்பில் - 01.05.2000
6. இறைமக்களின் வரலாறு - 08.10.2000
7. அருட்தந்தை பேசில் அந்தோனி மோரோ - 01.01.2001
8. சங்ககிரி புத்தாலய அபிஷேக நினைவு மலர் - 15.05.2001

Printed at

**MAVIGA,** Nobili Campus, K. Pudur, Madurai - 625 007